RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt21s312

OPEN ACCESS

# சோழர்களின் போரியல் கூறும் உளவியல்

வே. ரேணுகா [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638012, தமிழ்நாடு, இந்தியா

# Psychology and War of the Cholas

V. Renuka [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women (Autonomus), Erode-638012, Tamil Nadu, India

* Corresponding Author: rathi.renu1982@gmail.com

Received: 07-03-2021
Revised: 13-08-2021
Accepted: 01-09-2021
Published: 30-10-2021

Check for updates

## ABSTRACT

The purpose of this article is to show the psychological norms of the Tamil society, which refined the morals of living with joy with the world's creatures, made them think new things, found new things and established a good life through it. This review aims to highlight the psychological depictions of not only inner life but also outer life in the structure of Tamil literature. Thousands of years ago, primitive man, who lived in mountains, forests and caves, used his sixth sense to distinguish himself from those animals. The sixth sense is the faculty of discerning what is good and bad. It is known as mind, thinking, rationality and psychology. In this way, this article highlights the psychological attitudes that were intertwined in the war life of the Cholas.

**Keywords:** Cholas, Psychology, Tamil society, War

## முன்னுரை

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மலைகளிலும், காடுகளிலும், குகைகளிலும், விலங்கொடு விலங்காய் வாழ்ந்த ஆதிமனிதன், அந்த விலங்குகளிடமிருந்து தன்னை வேறுபடுத்திக்கொள்ள தனது ஆறாம் அறிவைத் துணையாகக் கொண்டான். ஆறாம் அறிவென்பது நல்லது அல்லதை பகுத்துணரும்ஆற்றலாகும். இது மனமென்றும், சிந்தனையென்றும், பகுத்தறிவென்றும், உளவியலறிவென்றும் அறியப்படுகிறது.

“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே”

என்னும் தொல்காப்பியர் வாக்கின்படி, மெய், வாய், மூக்கு, கண், செவி முதலான ஐம்பொறிகளால் முறையேற்றப்படும் ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஒலி என்னும் ஐம்புலன்களோடு இவற்றின் கூட்டுணர்வாய் உணரப்படும் மனதுடன் இணைந்த உளவியலை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் ‘சோழர்களின் போரியல்’ குறித்து ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும் (Balasubramanian, 2019).

## போர் வாழ்வின் தோற்றம்

தேவை, பேராசை, பொறாமை, கள்ளத்தனம் ஆகிய உணர்வுகளால் உந்தப்பட்ட மனிதன் இவை ஒவ்வொன்றின் பொருட்டும் சக மனிதனுடனும், சமூகத்துடனும் போராட்டங்களை நிகழ்த்திய வண்ணம் இருக்கின்றான். இருவேறு மனிதர்களுக்கிடையே உருவாகும் கருத்து வேறுபாடு, இருவேறு

குழுக்களுக்கு இடையேயானதாக மாறும் போது போர் தோற்றம் பெற்றது. கூட்டமாய் வாழும் விலங்குகள் தங்கள் கூட்டத்திற்குள்ளிருக்கும் மற்றொரு விலங்கைக் கொன்று தின்பதில்லை. ஆனால் ஆறறிவு கொண்ட மனிதர்களிடையே, கூட்டமாய் வாழ்வதற்கான சமூகஉணர்வு தோன்றிய நாளிலிருந்தே சக மனிதனுடனான பொறாமையுணர்வும், போட்டி பூசல்களும் தோன்றியிருப்பதை வரலாறு அறியத் தருகிறது. பொது நோக்கில், போர்கள் வெறுக்கத் தக்கவை. அவசியமற்றவை. யுத்தங்களின் பயன் என்பது அழிவு எனக் கருதப்பட்டாலும், போர்வாழ்வு ஒரு சமூகத்தின் பண்பாட்டுக் கூறாக விளங்குதலை மறுக்கவியலாது. ஒரு இனக்குழு மற்றொரு இனக்குழுவோடு முரண்பட்டு போரைத் தொடங்குகையில் அது தம்முள் மேலும் ஒன்றுபட்டுக் குறுகுகிறது. அதன் வலிமையும், இனமாண்பும் உறுதிப்படுகிறது. அவ்வகையில் மனித இனத்தின் போர் வாழ்வு குறித்து அறிய உளவியல் பார்வை இன்றியமையாததென உணரலாம்.

## சோழர்கள்

சோழர் என்பவர் கி.மு.3 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.3 ஆம் நூற்றாண்டு வரையிலும், பிறகு கி.பி.9 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.13 ம் நூற்றாண்டு வரையிலும் புலியை அரசுச் சின்னமாகக் கொண்டு, காவிரி நதி சார்ந்த பகுதிகளை ஆண்ட அரச பரம்பரையைச் சார்ந்த மன்னர்களாவர். இவர்கள் இலக்கியங்களில் கிள்ளி, சென்னி, வளவன் என்றழைக்கப்பட்டனர். சோழ மன்னர்கள் நாட்டையும், குடிமக்களையும் காத்து, நீர்வளத்தினைப் பெருக்கி, வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து, நல்லாட்சி நடத்தியதால் புலவர் பெருமக்களால் பாராட்டப்படும் சிறப்பினைப் பெற்றார்கள். உறையூரும், காவிரிப்பூம்பட்டினமும் இவர்களது தலைநகரங்களாக விளங்கின. மண், புகழ், செல்வம் போன்றவை சோழர்களின் போர் முறைக்கு காரணமாக இருந்துள்ளன. சில பொழுதில் ‘மகள் மறுத்தல்’ போன்ற காரணங்களும் போர் முறைக்கு வித்திட்டுள்ளன. எனவே, போர் தோற்றம் பெற்றதற்கான அடிப்படைக் காரணங்களில் வீரம், வள்ளன்மை, கடமையுணர்வு போன்ற உளவியல் நுட்பங்கள் பொதிந்துள்ளன என்பது மறுக்கவியலாத உண்மையாகும். மேலும், போரின் வெற்றியிலும், தோல்வியிலும் சோழ வேந்தர்களின் ‘ஆளுமை உள உணர்வு’ முக்கிய காரணியாகச் செயல்பட்டது என்பதும் புலனாகின்றது.

## முற்காலச் சோழர்கள்

முற்காலச் சோழர்கள் குறித்து அறிந்து கொள்வதற்கு சங்க இலக்கியங்கள் துணை நிற்கின்றன. அவற்றுள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, கலித்தொகை போன்றவற்றிலும், சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினென்கீழ்கணக்கு நூல்களிலும், காப்பியக் காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரம், பக்திக்காலத்தில் தோன்றிய தேவாரப்பாடல்கள், பெரியபுராணம், சிற்றிலக்கியக்காலத்தில் தோன்றிய கலிங்கத்துப்பரணி முதலான பல்லேறு காலகட்டங்களில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் முழுவதிலும் முற்காலச் சோழர்கள் குறித்த தகவல்கள் விரவிக் காணப்படுகின்றன.

## பிற்காலச் சோழர்கள்

பிற்காலச் சோழர்களின் வரலாற்றை அறிய கலிங்கத்துப்பரணி, மூவருலா, பெரியபுராணம், பன்னிரு திருமுறைகள், திவ்யசூரிசரிதம், வீரசோழியம், தண்டியலங்காரம் போன்ற பல்வேறு இலக்கிய, இலக்கணங்கள் துணைநிற்கின்றன. மேலும் அக்காலத்தில் தோன்றிய கல்வெட்டுக்கள், செப்பேடுகள் போன்றவையும் பிற்காலச் சோழர்கள் குறித்து அறிய உதவும் துணைச் சான்றாதாரங்களாக திகழ்கின்றன.

## சோழர் போரும் உளவியலும்

முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி புறநானூற்றில் இடம்பெற்றுள்ள சோழவேந்தன் ஆவான். இவன் போர்க்களத்தில் பெரு வெற்றி பெற்று, யானையின் மேல் அமர்ந்துகொண்டு, வீரர்களின் வெற்றி ஆரவாரமும், மகிழ்ச்சியும் புடை சூழ பவனி வந்தான். இந்நிலையை,

“புலிநிறக் கவசம்பூம் பொறிசிதைய

எய்கணை கிழித்த பகட்டு எழில் மார்பின்

மறலி அன்ன களிற்று மிசையோனே”

என்னும் புறநானூற்று வரிகள் காட்சிப்படுத்தியுள்ளன (Balasubramanian, 2004). இவ்வெற்றி ஊர்வலத்தின் நோக்கம் குடிமக்களின் கலக்கத்தினை போக்கி, அவர்களுக்கு மன ரீதியான பாதுகாப்பு உணர்வினையும், மகிழ்ச்சியையும் தருதல் என்பதாகும். இதன்வழி, சோழ மன்னர்களின் போர் வாழ்வானது நாட்டு மக்களின் மீது கொண்டிருந்த அளவிடற்கரிய அன்பினை வெளிப்படுத்துகின்றது.

சோழன் நலங்கிள்ளியின் முரசானது முழங்கத் தொடங்கும் பொழுது, பகைவர்களின் உள்ளம் அச்சத்தால் உறைந்த நிலையில் இருந்தது. இவ்வேந்தன் தனது வெற்றிக் கொண்டாட்டத்தில், தங்கத்தை நெருப்பில் சுட்டு, உருவாக்கிய பொன் தாமரைகளை பாணர்களுக்கு அளித்தான். அப்பொன் தாமரைகளை நூலில் கோர்த்து மாலையாக்கி தமது தலையில் அணிந்த பாணர்கள் மகிழ்வுடன் நலங்கிள்ளியை சூழ்ந்தாடினர். மேலும், தனது படைவீரர்கள் களிக்கும்படி உணவு உருண்டைகள் அளித்து மகிழ்ந்தான். இந்நிகழ்வை,

“ஊண் சோற்று அமலை”

என்று புறுநானூறு காட்சிப்படுத்தியுள்ளது. இதன்வழி, தன் வாழ்நாளின் பெரும் பகுதியைப் போர்ப் பணிகளாலும், வீரச்செயல்களாலும் கழித்து, தன் நாட்டு மக்களின் நலம் பேணும் நல்லுள்ளம் கொண்டவனாகச் சோழன் நலங்கிள்ளி வாழ்ந்துள்ளான் என்பது அறியலாகின்றது. இவ்வேந்தனின் உணவுக் கொடையானது இன்பத்தில் பெரிது இன்னமுதால் மகிழ்வித்தல் என்னும் உளப்பாங்கை உலகிற்கு உணர்த்துகின்றது (Balasubramanian, 2004). சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைக் குறிக்கும்,

“வாடா வஞ்சி வாட்டும் நின்

பீடுகெழு நோன் தாள் பாடுங்காலே”

எனும் புறநானூற்றுப் பாடலில் வில்லைப் பொறித்த குடிப்பெருமைக் கொண்ட சேரனின் வஞ்சிநகர் வாடும் படியாக போர் மேற்கொண்ட சோழர் பெருமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எதிர்கொண்ட சேரவேந்தனின் பெயர் அறுதியிட்டு கூறப்படவில்லை. எனினும் கனவிலும் காண இயலாத கடும் படைப்போராக வஞ்சிப்போர் நிகழ்ந்துள்ளது (Balasubramanian, 2004).

“காற்றோடு எரி நிகழ்ந்தன்ன செலவின்

செருமிகு வளவ நிற்சினை இயோர் நாடே”

எனப்பட்டமையால் காற்றோடு, நெருப்பு கலந்தது போல, கிள்ளியின் படைகள் எதிரிநாட்டில் முன்னேறியுள்ள தகவல் அறியலாகின்றது. இதன் வழி, போரில் வெற்றியைப் பெற்றிட போராடிய போர் வீரர்களின் உள்ளத்தின் வேகம் அறியலாகின்றது (Balasubramanian, 2004).

சோழன் சேரமான் பாமுள்ளூர் எறிந்த இளஞ்சேட்சென்னி மாற்றார் மதில்களைக் கைப்பற்றுவதற்கு முன்னரே அதனை இரவலர்களுக்கு பரிசாக வழங்கும் பண்புள்ளவன்.

“ஆர் எயில் அவர் கட்டாகவும் நுமது எனப்

பாண் கடன் இறுக்கும் வள்ளியோய்

பூண் கடன் எந்தை நீ இரலவர் புரவே”

இப்புறநானூற்று வரிகளின் வாயிலாக இளஞ்சேட்சென்னி தன் போர்த்திறத்தின் மீதும், தனது படைகளின் வீரத்திறத்தின் மீதும் கொண்டிருந்த உள நம்பிக்கை புலனாகின்றது (Balasubramanian, 2004).

குலோத்துங்கச் சோழனுக்கு திறை செலுத்த மறுத்த வடகலிங்க நாட்டை நோக்கிப் பயணம் மேற்கொண்ட சோழப்படையானது சங்கு முழக்கியும், முரசதிர்ந்தும், கொம்பு ஒலித்தும் சென்றது.

இப்போர்ப்பயணம் இரவு நேரத்தில் மேற்கொள்ளப்படவில்லை எனக் கலிங்கத்துப்பரணி குறித்துள்ளமையால், சோழப்படையானது இரவு நேரத்தில் ஓய்வெடுத்து பகல் நேரப் பயணத்தை மேற்கொண்டிருப்பர் எனக் கொள்ளலாம்.

"உதயத்து ஏகுந்திசை கண்டு அது

மீள விழும்பொழுது ஏகல் ஒழிந்தது"

என்றவழி, வடகலிங்கம் நோக்கி போர் மேற்சென்ற சோழப்படையானது, மலைக்குவடுகளால் சூழப்பட்டிருந்த கலிங்கநாட்டினை சூரியன் மறைந்த நேரத்தில் அணுகியுள்ளனர் (Puliyur Kesigan, 2018). எனினும் இரவு நேரத்தில் தாக்குதல் நிகழ்த்துவது முறைமை அன்று எனக் கருதியமையால்,

"வேலாலும் வில்லாலும் வேலி கோலி

வெற்பதனை விடியளவும் காத்து நின்றே"

விடியும் நேரம் வரையில் காத்திருந்து விடிந்த பின்னரே தாக்குதலைத் தொடங்கினர் எனக் குறிப்பிட்டுள்ளார் சயங்கொண்டார். இதன்வழி, பிற்காலச் சோழர்களின் போர் அறம் புலனாகின்றது (Puliyur Kesigan, 2018).

## முடிவுரை

சோழர் காலத்திய போரியல், செங்கோன்மைக்காக நடத்தப்பட்டது எனத் திட்டமாகின்றது. பெரும்பான்மையான அரசர்கள் நீதி, நற்குணம் ஆகிய பண்பாடுகள் அமைந்தவர்களாக இருந்தனர். தமது நாட்டிற்கும், மக்களுக்கும், மொழிக்கும், கலைகளுக்கும், பண்பாட்டிற்கும் இடையூறுகள் நேர்ந்த பொழுது மன்னர்களும், மக்களும் போர் எனும் ஒருணர்வுடன் இணைந்து செயலாற்றியுள்ள உளவியல் பான்மை இக்கட்டுரையின் வழி வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

## References

Balasubramanian, K, V. (2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Balasubramanian, K.V. (2019) Tholkappiyam, NCBH Publications, Chennai, India.

Puliyur Kesigan, (2018) Kalingaththu Parani, Kazhaga Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License